(திருமதி. தா. இராசாம்பாள்)

பெற்ற தவறுக்கு மன்னிப்புக் கோரவேண்டுமென்று சொல்வது அவ்வளவு பொருத்தமில்லாவிட்டாலும், தவறுக்கு தகுந்த தண்டணை அளிப்பதுடன் மேலும் இத்தகைய தவறுகள் நடக்காமல் பார்த்துக்கொள்ளத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, தற்போது என்னிடத்தில் அது சம்பந்தமாக எந்த விவரங்களும் இல்லை. ஆனாலும் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். அரசு நடத்துகின்ற நிகழ்ச்சிகளில் அந்தந்த தொகுதியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினரை அழைக்க வேண்டுமென்ற மரபை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோம். ஆனால் அதே நேரத்தில் மற்ற அமைப்புகள், நடத்துகின்ற நிகழ்ச்சிகள் இருக்கின்றன. சில சேவா சங்கங்கள், மற்ற பல அமைப்புகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட அமைப்புகள் நடத்துகின்ற நிகழ்ச்சிகளில், அவர்கள் யார் யாரை வரவேண்டுமென்று விரும்புகிறார்களோ அவர்களை அழைக்க முழு உரிமை இருக்கிறது. அதை நாம் புறக்கணித்து விட முடியாது. ஆனால் அரசு செலவிலே அரசாங்கம் நடத்துகின்ற நிகழ்ச்சிகளுக்கு சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களைக் கட்டாயம் அழைக்க வேண்டும்.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் கட்சியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அரசு நடத்துகின்ற விழாவிற்குச் சம்பந்தப்பட்ட தொகுதி சட்டமன்ற உறுப்பினரை அழைப்பது சரிதான் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். போஸ்ட் ஆபீஸ், இரயில்வே ஸ்டேஷன் போன்றவற்றைத் திறக்கின்ற விழாக்களுக்குச் சம்பந்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினரை அழைப்பதற்கு அல்லது அமைச்சரை அழைப்பதற்குரிய மரபை மத்திய அரசு கடைப்பிடிக்கின்றதா?

[பதில் இல்லை]

இ. உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை

திரு. மி. வின்சென்ட்: தலைவரவர்களே, தேர்தல் அறிக்கையில் காவல் துறையினர் போராட்டம் நடத்தலாம் என்று அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சொல்லியிருப்பதாக ஒரு தவறான தகவலைத் தந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ரகுமான்கான் அவர்கள்மீது நான் ஒரு உரிமை மீறல் பிரச்சனை தந்துள்ளேன்......

திரு. அ. ரகுமான்கான்: சார், நான் ரெடி, இப்போது எடுத்துக்கொள்ளலாம். நான் தயாராக......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. மி. வின்சென்ட் அவர்கள் கொடுத்த பிரச்சனை பற்றி திரு. ரகுமான்கான் அவர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளது. பதில் வரட்டும். வந்த பின் எடுத்துக்கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே. நோட்டீஸ் வந்திருக்கிறது. நான் தயாராக இருக்கிறேன். இப்போதே எடுத்துக்கொள்ளலாம்.

[முற்பகல் 10.20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு.ரகுமான்கான் அவர்கள் தனது பதிலை எனக்கு எழுதி அனுப்ப வேண்டும்.

திரு. அ. ரகுமான்கான்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்த உரிமை மீறல் பிரச்சினை பற்றி எனக்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருக்கின்றது. நான் இப்போது தயாராக இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய பதிலை எனக்கு எழுதி அனுப்ப வேண்டும். அதற்குப் பிறகுதான் அதை எடுத்துக்கொள்வது பற்றி நான் முடிவு செய்வேன்.

திரு. அ ரகுமான்கான்: தலைவரவர்களே. அப்படிப் பதில் அனுப்பவேண்டும் என்று பிரிவிலேஜ் ரூலிலே எங்கே இருக்கின்றது விதி?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது குறித்து நாளை எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. மி. வின்சென்ட்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திரு. ரகுமான்கான் அவர்களே தயார் என்று சொல்கிறார். ஆகவே ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவர் அதற்குரிய பதிலை எனக்கு எழுதி அனுப்பிய பிறகுதான் நான் அது குறித்து முடிவு செய்யவேண்டுமே தவிர இங்கே உறுப்பினர்கள் திடீரென்று எழுந்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்றால் அவ்வாறு எடுத்துக்கொள்ள இயலாது.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிரிவிலேஜ் சம்பந்தமாக அனுப்பப்பட்ட நோட்டீசுக்கு நான் பதில் அனுப்பவேண்டுமா என்று கேட்டார்கள். ஆனால் அப்படி அனுப்பப்பட்டதற்குப் பிறகு சம்பந்தப்பட்ட உறுப்பினர் அதற்குரிய பதிலை அனுப்பியதற்குப் பிறகு அதிலே உரிமை மீறல் இருக்கிறதா, இல்லையா என்று பார்க்க வேண்டியது தாங்கள். அப்படிப்பார்த்து அதை எடுத்துக்கொள்வதாக இருந்தால் எடுத்துக் கொள்ளலாம், இல்லை என்றால் நிராகரித்து விடலாம்.

திரு. அ. ரகுமான்கான்: ஏற்கெனவே பல்வேறு உரிமைப் பிரச்சினைகள் கொடுத்திருக்கிறோம். அதற்கெல்லாம் பதில் கொடுத்தா இருக்கிறார்கள்.?

திரு. நா. சுந்தரராஜ்; தலைவரவர்களே, நேற்றையதினம் பத்திரிகையிலே சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே பாம் வைக்கப்பட்டு இருப்பதாகச் செய்தி வந்தது. அது சம்பந்தமாக ஒரு முழு அறிக்கையை இந்த அவையிலே தாக்கல் செய்வதற்கு அரசு தயாராக இருக்கின்றதா?

[பதில் இல்லை]

3. ஒத்திவைப்புத் தீர்மானம்

பள்ளிக் கட்டிட நிதி கொடுக்க இயலாத குழந்தைகளை தேர்வு எழுத அனுமதிக்காதது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் குமரி அனந்தன், ப. தீர்த்தராமன், எஸ்.என். இராமசாமி, பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் சென்னை நகர் பள்ளிகளில் கட்டிட நிதி கொடுக்க இயலாத பெற்றோரின் குழந்தைகளைத் தேர்வு எழுத அனுமதி மறுப்பது குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்னும் தீர்மானத்தை முன்மொழிய அனுமதி கேட்டு ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்துள்ளனர். இது எப்படி அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்தது என்பது குறித்து அவர்களுள் ஒருவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் மிகச் சுருக்கமாக விளக்கும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம் என்று விடுதலை பெறுவதற்கு முன்பே பாரதி பாடினான். விடுதலை பெற்ற பாரதம் 12 வயது வரை உள்ள குழந்தைகளுக்குக் கட்டாயக் கல்வி கொடுக்கவேண்டும் என்று அரசியல் அமைப்பில் வழி காட்டு விதியில் குறிப்பிட்டிருக்கின்றது. ஆனால், நமது அருமை மிக்க கல்வியிற் சிறந்த தமிழ்நாட்டில் உள்ள சென்னை நகரத்தில் சில பள்ளிக்கூடங்களில் நடைபெறுகின்ற நிகழ்ச்சியை இங்கே விவாதிப்பதற்காகக் காரணங்களை உங்கள் முன்னால் எடுத்து வைக்க இருக்கிறேன். குழந்தைகளைப் பள்ளியிலே சேர்ப்பதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன. அதிலே முக்கியமானது, உயிர்நாடியானது அவர்களுக்கு அறிவு புகட்டவேண்டும் என்பதற்காக இருந்தாலும் அவர்களுக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற பள்ளிகள் குடியிருக்கின்ற இடத்திற்கு அருகாமையில் இருக்கின்றதா என்று பார்த்துத்தான் பெற்றோர்கள் தேர்ந்தெடுக்கிறார்கள்.

அந்தப் பள்ளிக் குழந்தைகளைப் பள்ளிக்கூடங்களிலே சேர்ப்பதற்கு, பெற்றோர்கள் படுகின்ற பாடு கொஞ்சநஞ்சம் அன்று. ஆனால் அதிலும் சில பள்ளிக்கூடங்களில் பிள்ளையைச் சேர்ப்பதற்கு இடம் கிடைக்காமல் பெற்றோர்கள் படுகின்ற பாடு 'தாளம் படுமோ, தறி படுமோ, யார் படுவார்கள்' என்று சொல்கிற நிலமையில் இருக்கிறது. அப்படி மிகுந்த சிரமங்களிடையே பள்ளியில் சேர்த்து விட்டாலு

(மணியடிக்கப்பெற்றது)